## மே – 8

**"நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்."**

**1யோவா 2 : 25.**

நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கிருபையுள்ள வாக்குத்தத்தங்களை அடைவதில் நாம் செய்வதற்கு சிறிதளவு ஏதோ உண்டென்று நாம் எல்லோரும் உணர்ந்துகொள்ள வேண்டும். இப்பொழுதிருக்கிற ஜீவியத்தின் காரியங்கள் சம்பந்தமாக நம்முடைய அப்பமும், தண்ணீரும் நிச்சயமாக நமக்குக் கிடைக்கும் என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். ஆனால் இவைகளை அடைவதற்குரிய நியாயமான சந்தர்ப்பங்களை நாம் அசட்டை செய்ய வேண்டுமென்று இது குறிக்கிறதில்லை. கொஞ்சக் காலஞ்சென்று இராஜ்யத்தில் ஒரு பங்கையுங்கூட நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். ஆனால் நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்குவது நம்முடைய பொறுப்பாயிருக்கிறது. ஒவ்வொரு காரியத்தின் சம்பந்தமாகவும் தன்னுடைய பாகத்தைச் செய்வதற்கு தேவன் பூரணமாக தகுதியுள்ளவரும் பூரணமாக இஷ்டமுள்ளவருமாக இருக்கிறார். ஆனால் நம்முடைய பிரயோஜனத்திற்காகவே நமது கிரியைகளினால் நம்முடைய விசுவாசத்தைக் காண்பிக்க அவர் நம்மை அழைக்கிறார். அதாவது எல்லா நியாயமான வழிகளிலும் அவருடன் கூட நம்முடைய ஒத்துழைப்பினால் விசுவாசத்தைக் காண்பிக்க. **-Z '03, 175 (R 3204)**

நித்திய ஜீவன் மனிதனில் இயற்கையாய் அமைந்திருக்கிற உடைமையல்ல. ஆனால் அது யாருடைய குணங்களை தேவனுடைய குணத்துக்கு இசைவாக இருக்குமோ அவருக்கு அளிக்கப்படுகிற தேவனின் ஒரு ஈவாக இருக்கிறது. உண்மையுள்ளவர்களுக்கு இந்த வாக்குத்தத்தம் நிபந்தனையற்றதாயும் யேகோவா தேவனின் ஆணையினால் கட்டப்பட்டதாயுமிருக்கிறது. நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் தேவன் தனது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்பதின் மீது நம்முடைய விசுவாசம் மாற்றமுடியாத உறுதியான நம்பிக்கையை வைக்கலாம். இப்படிப்பட்ட வாக்குத்தத்தம் பக்திக்கும் விசுவாசத்திற்கும் எவ்வளவு ஏவுதலாக இருக்க வேண்டும். **- P '30, 77.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

சங் 21:4; 133:3; தானி 12:3; மத் 19:29; லூக் 20:36; யோவா 3:14-17; 4:14; 5:24, 25,29,39; 6:27,40,47,50-58,68; 10:10,28; 12:50; 17:2,3; அப் 13:46,48; ரோம 2:7; 5:21; 6:22,23; 1கொரி 15:53,54; 2கொரி 5:1.

**கோபுர வாசிப்பு : Z '15, 12 (R 5608).**

**வினாக்கள்:** இந்த வசனம் இந்த வாரத்தில் என்னை எவ்விதம் தூண்டியது? ஏன்? பலன் என்ன?